DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO. 56/2025**

**Deposition of Lw2 examined as Pw2** **Date: 10.02.2026**

| | |
|---|---|
| Name | ராமசாமி |
| Father's/Husband's Name | ராக்கப்பன் |
| Village | நாகூர் |
| Taluk | |
| Age | 77/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.02.2026

(A1 , A2 Present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். 1ம் எதிரி எனது மருமகன் ஆவார். 2வது எதிரியை எனக்குத் தெரியும். 15 ஆண்டுகளுக்கு முன்பு எனது மகளை 1வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எனது மகளுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். எனது மருமகன் 1வது எதிரி இரண்டாவது எதிரியை சேர்த்துக்கொண்டு எனது மகளுடன் பிரச்சனை செய்து வந்தார். கடந்த 2022 ம் ஆண்டு ஒருநாள் நானும் எனது மனைவியும் எனது மகளை பார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு வந்திருந்தோம். அன்றைய தினம் காலை 10.30 மணி அளவில் 1வது எதிரி எனது மருமகனுடன் 2வது எதிரியும் வந்தார்கள். நான் எனது மருமகனான 1வது எதிரியிடம், ஏன் 2வது எதிரியுடன் சேர்த்துக்கொண்டு கொடுமைப்படுத்தி வருகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எனது மருமகனான 1வது எதிரி ஊர் மேய்கின்ற உங்கள் மகளுடன் நான் வாழ முடியாது. உங்கள் மகளை அழைத்துக்கொண்டு சென்று விடுங்கள் என்று எனது மகளை கட்டையால் அடித்து, வாசலில் தள்ளி விட்டார். 2வது எதிரியும் மகளை அடித்தார். நான் 2வது எதிரியுடன் தான் வாழப்போகிறேன். உனது மகளையும், உனது பேரக்குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சென்று விடு என்று எனது மருமகனான 1வது எதிரி கூறினார். அதன்பிறகு நாங்கள் எங்கள் ஊருக்கு சென்றுவிட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது மகளுக்கு 1வது எதிரியை திருமணம் செய்து கொடுக்கும் போது 1வது எதிரி எங்கு வேலை பார்த்துவந்தார் என்றால் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். திருமணத்திற்கு பின்பு வெளிநாட்டிற்கு சென்றாரா என்றால் ஆமாம். வெளிநாட்டிற்கு சென்று எப்போது திரும்ப வருவார் என்றால் 5வருடம் கழித்து வந்தார். திருமணம் ஆன புதிதில் 1வது எதிரி எனது மகளை நல்ல முறையில் பார்த்து வந்தாரா என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரிக்கும் போது 1வது எதிரியிடம் சென்று , எனது மகளை ஏன் கொடுமைப்படுத்துகிறாய் என்று கேட்ட போது ,எனது மகளுடன் வாழ முடியாது என்று சொல்லியதை போலிசாரிடம் கூறினேனா என்றால் கூறினேன். 2வது எதிரியை நான் எப்போது பார்த்தேன் என்றால் எனது மருமகனின் வீட்டில் வைத்து எனது மகளை அடிக்கும் போது தான் முதன் முதலாக பார்த்தேன். 2வது எதிரியின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, தற்போது தெரியுமா என்றால் தெரியும். முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி நாங்கள் ஊருக்கு சென்று விட்டு எப்போது திரும்ப வந்தோம் என்றால் 5 ம் தேதி

LTI ராமசாமி

திரும்ப வந்தோம். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை போலிசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகள் வீட்டிற்கு நான் எந்த தேதியில் சென்றேன் என்பதை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 1வது எதிரிக்கும், எனது மகளுக்கும் விவாகரத்து வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். விவாகரத்து வழக்கு போடும் போது எனது மகள் எனது வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. மயிலாடுதுறையில் தான் இருந்தார். நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடந்தது. மயிலாடுதுறையில் இருந்து நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு எனது மகள் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது மகள் குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்ன நேரத்தில், இடத்தில் அ.சா.1 க்கு 1,2 எதிரிகளால் எவ்வித சம்பவமும் ஏற்படவில்லை என்றாலும் அ.சா.1, 1வது எதிரியிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து கூடுதலாக பணம் கேட்டதால் 1வது எதிரி கொடுக்க மறுத்ததால் அதற்கு ஆதரவாக 2வது எதிரி செயல்பட்டதால் அ.சா.1 எனது மகள் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

LTI [illegible]

காட்டப்பட்டு
ஏற்கப்பட்டது

10/2/26

மயிலாடுதுறை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO. 56/2025**

**Deposition of Lw3 examined as Pw3** **Date: 10.02.2026**

| | |
|---|---|
| Name | ராகினி |
| Father's/Husband's Name | ராமசாமி |
| Village | நாகூர் |
| Taluk | |
| Age | 70/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.02.2026

(A1 , A2 Present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார் , அ.சா.2 எனது கணவர் ஆவார். ஆஜர் 1 வது எதிரி எனது மருமகன் ஆவார். 2வது எதிரியை எனக்கு தெரியும். நாங்கள் 2010 ம் வருடம் எனது மகள் அனிதாவை 1வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எனது மகளுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். 1 வது எதிரி,அ.சா.1 ஐ திருமணம் செய்து கொண்டு பத்து ஆண்டுகள் வரை நன்றாகத்தான் பார்த்து கொண்டார். அதன் பிறகு 2வது எதிரியுடன் தொடர்பு வைத்துக்கொண்டு எனது மகளை கொடுமைப்படுத்தி வந்தார். நானும் எனது கணவரும் அ.சா.1 ஐ பார்ப்பதற்காக 2022 ம் ஆண்டு ஒருநாள் அவரது வீட்டிற்கு சென்றிருந்தோம். அப்போது காலை 11.00 மணி அளவில் எதிரிகள் இருவரும் வீட்டிற்கு வந்தார்கள். 1வது எதிரி அ.சா.1 னிடம் உனது அப்பா, அம்மா வந்துள்ளார்கள் அவர்களுடன் நீ இந்த வீட்டை விட்டு சென்றுவிடு என்று சொன்னார். அதற்கு அ.சா.1 நான் செல்ல மாட்டேன் என்று சொன்னார் . எனது மகளை எதிரிகள் இருவரும் குச்சிக்காரி, தேவுடியா மகளே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி, 1வது எதிரி கட்டையை எடுத்து அ.சா.1ன் முதுகில் அடித்து எதிரிகள் இருவரும் அ.சா.1ஐ இழுத்துக்கொண்டு வாசலில் தள்ளி, இனிமேல் நீ இங்கு இருக்கக்கூடாது உனது பெற்றோருடன் சென்று விடு என்று சொன்னார்கள். 1வது எதிரியிடம் நீ செய்வது சரியா என்று கேட்டதற்கு என்னையும் குச்சிக்காரி, தேவுடியா மகளே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார். நானும், எனது கணவரும் எங்கள் ஊருக்கு சென்று விட்டோம். அதன் பிறகு அடுத்த நாள் அ.சா.1 எனக்கு போன் செய்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் வா என்று கூறினார். நானும், எனது கணவரும் அதற்கு அடுத்த நாள் வந்து, எனது மகளுடன் காவல் நிலையம் சென்று எனது மகள் புகார் மனுவினை கொடுக்க நாங்களும் உடன் இருந்தோம், இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1வது எதிரி அ.சா.1 ஐ முதுகில் கட்டையால் அடித்ததை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். 2022 ம் ஆண்டு எனது மகள் வீட்டிற்கு நாங்கள் சென்றபோது எனது மகள் போன் செய்து கூப்பிட்டாரா என்றால் இல்லை நாங்களே தான் சென்றோம். 2வது எதிரியுடன் சேர்ந்து கொண்டு 1வது எதிரி எனது மகளை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளது சம்பந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.

R. ராகினி

1வது எதிரி எனது மகளை வீட்டை விட்டு வெளியே இழுத்துப்போட்டு விட்டார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் எனது மகளை நாங்கள் ஊருக்கு அழைத்துச்சென்றோமா என்றால் இல்லை. எனது மகளை சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி அன்று எதிரிகள் இருவரும் அடித்து வீட்டை விட்டு வெளியே இழுத்துப்போட்டது சம்பந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. எப்போது எனது மகள் புகார் கொடுத்தார் என்றால் 5ம் தேதி புகார் கொடுத்தார். 1வது எதிரி என்னையும் , எனது கணவரையும் திட்டினார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். 1வது எதிரிக்கும், எனது மகளுக்கும் விவாகரத்து வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். விவாகரத்து வழக்கு போடும் போது எனது மகள் எனது வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. மயிலாடுதுறையில் தான் இருந்தார். நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடந்தது. மயிலாடுதுறையில் இருந்து நாகப்பட்டினம் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு எனது மகள் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். எனது மகள் குத்தாலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் 5ம் தேதி புகார் கொடுத்தார். எனது மகள் கொடுத்த புகாரை யார் எழுதினார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்து 3 வது நாள் புகார் கொடுத்ததற்கான காரணத்தை புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ எனது மகள் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எங்கு வைத்து எப்போது விசாரித்தார் என்றால் 5ம் தேதி விசாரித்தார். நான் சொன்ன நேரத்தில், இடத்தில் அ.சா.1 க்கு 1,2 எதிரிகளால் எவ்வித சம்பவமும் ஏற்படவில்லை என்றாலும் அ.சா.1, 1வது எதிரியிடம் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து கூடுதலாக பணம் கேட்டதால் 1வது எதிரி கொடுக்க மறுத்ததால் அதற்கு ஆதரவாக 2வது எதிரி செயல்பட்டதால் அ.சா.1 எனது மகள் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R. ராகினி

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென்று ஏற்கப்பட்டது

10/12/20

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை

R. ராகினி